# தமிழ் முரசு

තමිල් මුරසු

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 1 இதழ் : 81 - 19.02.2023


## மாற்றுச் சிந்தனைவாதி அ.யேசுராசா

## ஏ.எஸ்.உபைத்துல்லாவின் ‘வேராகிப்போன மனிதர்கள்’



## நம் சவால் எல்லாம் வாழ்வாதாரமே

- எஞ்சலோ ஜோன்ஸ்

## ஈழத்தில் சிறுவர் இலக்கியமும் குழந்தைக் கவிஞர் அம்பியும்

## துரைவி நினைவுப்பேருரையும் விருது வழங்கலும்

## ‘பாரம்பரியம்’ நிகழ்ச்சியில் முதுபெரும் ஈழத்துப் பாடகர் வீ.முத்தழகு!

தமிழ் முரசு
තමිල් මුරසු
Thamil Murasu
நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com
தொலைபேசி: 0115 200 900/011 588 6187
விளம்பரம் : 0771721880

# ‘சிந்தனை’ தினமும் தொழில்நுட்ப வளர்ச்சியும்

பொதுவாக பெரும்பாலான முக்கிய விடயங்களுக்கு சர்வதேச தினங்கள் ஐ.நா.சபையின் அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்டு கொண்டாடப்பட்டு, அனுஷ்டிக்கப்பட்டு, நினைவுகூரப்பட்டு வருகின்றன என்பது யாவரும் அறிந்ததே. உருவாக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தினமும் ஏதோவொரு வகையில் முக்கியத்துவம் உடையதாகவே இருக்கின்றது. அந்தவகையில், உலகளாவிய சிந்தனை தினம் (Thinking Day) என்றொரு தினம் உருவாக்கப்பட்டு நினைவுகூரப்படுகின்றது.

சிந்திப்பது குறித்து சிந்தை இழந்துள்ள இந்த தொழில்நுட்ப வளர்ச்சி மிக்க காலகட்டத்தில், இத்தினம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது எனலாம். சிந்தனையே புதிய தொடக்கத்துக்கான திறவுகோல். சிந்தனை இல்லையென்றால் அறிவியலும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ச்சியடைந்திருக்காது. இது தவிர, நம்முடைய அடுத்த ஒவ்வொரு நகர்வுக்கும் செயலுக்கும் அடிப்படையாக இருப்பது சிந்தனைதான் என்று கூறப்படுகின்ற போதிலும், தொழில்நுட்ப வளர்ச்சியின் பின்னரான மனித சிந்தனை எவ்வாறு சென்றுகொண்டிருக்கின்றது, தலைமுறைகளுக்கிடையில் எவ்வாறான சிந்தனாசக்தி வளர்ந்திருக்கின்றது என்பதும் சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும்.

1926ஆம் ஆண்டு முதல் பெண்கள் சாரணர் இயக்கத்தைத் தொடங்கிய லார்ட் பேடன் பவுல் மற்றும் லேடி பேடன் பவுல் ஆகிய இருவரின் பிறந்த தினமான பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி உலக சிந்தனை தினமாக நினைகூரப்படுகின்றது.

உலகம் முழுவதும் சிந்தனைத் திறனை அதிகரிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கமாகும்.

சிந்தனை என்பது முன்னேற்றப் பாதைக்கான வழியாக இருந்து, அவ்வழியில் ஏற்படும் பிரச்சினைகளை நீக்கவும் தீர்க்கவும் உதவுகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சி பல்வேறு வகையில் மனித வாழ்வில் சௌகரியத்தையும் அசாத்தியமான மாற்றங்களையும் ஏற்படுத்தியிருந்தாலும், மறுபக்கம் அது புதுப்புது சிக்கல்களையும் உருவாக்கித்தான் வைத்திருக்கிறது.

கணிணி என்ற வலையமைப்பு மக்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து அது படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்ற நிலையில், மனிதனின் சிந்தனாசக்தியையும் கணிணி தன்னகப்படுத்திக் கொண்டுள்ளது. எவ்விடயமாயினும் Google இல் தேடலாம் - ‘Google இருக்க பயம் எதற்கு’ என்ற மனநிலையை இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சி உருவாக்கியிருப்பதுடன், மனிதனின் சிந்தனாசக்தியை படிப்படியாக மழுங்கடிக்கவும் செய்துள்ளது. இது ஓர் ஆபத்தான நிலைமையும் கூட.


ஆழ்ந்து சிந்திப்பது அல்லது ஒரு குறிப்பிட்ட விடயத்தில் கவனம் குவிப்பது என்பதெல்லாம் இன்றைக்கு ஒரு பெரும் சவாலாக மாறியுள்ளது! யூடியூபில் காணொளி பார்க்கும்போது, வாட்ஸ் அப் குறுஞ்செய்தி வந்ததும் பாதியிலேயே காணொளியை நிறுத்திவிட்டு அதற்குப் பதில் தரப் போய்விடுகிறோம். சட்டென முகநூலைத் திறந்து உலாவரத் தொடங்கிவிடுகிறோம். இப்படியே குறைந்தது முப்பது நிமிடங்கள் நம்மை அறியாமல் காணாமல் போய்விடுகின்றன.

இதற்கிடையில் அவசியமான வேலைகளைத் தவறவிட்டு விடுகிறோம். இப்படித்தான் பலருக்கும் நேர்கிறது. ஆக, தேடுபொறி தளத்தையே முழுநேரமாக பயன்படுத்துவதைத் தவிர்த்து ஒவ்வொருவரும் சிந்திப்பது குறித்து சிந்தனை செய்வதே அவசியமாகின்றது. அதுவே காலத்தின் தேவையும் கூட...



# ஏ.எஸ்.உபைத்துல்லாவின் ‘வேராகிப்போன மனிதர்கள்’

ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சியைத் தமிழ்ப் பண்பாட்டுடன் ஒப்பிடுகின்றபோது மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்ததாகக் கருதமுடியாது. ஆனால், பொருள் அடிப்படையிலும் கருத்து நிலையிலும் நோக்குகின்றபோது ஈழத்து நாவல் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. அதாவது சூழ்நிலையையும் சமகால நிகழ்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு பல நாவல்கள் வெளிவந்துள்ளன. ஈழத்தின் முதலாவது தமிழ் நாவலான சித்திலெப்பை எழுதிய ‘அசன்பே சரித்திரம்’ அவ்வாறு அமைந்த நாவல் என்று கூறலாம்.



தி.த.சரவணமுத்துப் பிள்ளையின் ‘மோகனாங்கி’ (1895) என்ற நாவலுடன்தான் திருகோணமலை மாவட்ட நாவல் இலக்கிய வளர்ச்சி ஆரம்பமாகின்றது. இதுவரையில் ஐம்பதுக்கு மேற்பட்ட நாவல்கள் இம்மாவட்டத்திலிருந்து வெளிவந்துள்ளன. அதேவேளை தொடர் கதைகளாகப் பல நாவல்கள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. இவை தவிர இம்மாவட்டத்தில் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் நாவல் எழுதும் பணியில் குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டும்தான் ஈடு பட்டு வந்துள்ளனர். அந்த வகையில் அ.அன்வர்தீன், (எழிலோன்) கே.எம்.எம். இக்பால், ஏ.எஸ்.உபைத்துல்லா ஆகிய மூவருமே நாவல் எழுதியதாக அறிய முடிகின்றது.

நாவலாசிரியர் ஏ.எஸ்.உபைத்துல்லா ஈழத்து இலக்கிய உலகிற்குப் புதியவரல்லர். கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலக்கியப் பணியில் ஈடுபட்டு வருபவர். ஏற்கனவே இவர் ஐந்து நூல்களை வெளியிட்டுள்ளார். இலகு வழித்தமிழ் (இலக்கணம் - 1990), தமிழ் வளர்த்த பெரியார்கள் (கட்டுரைத் தொகுப்பு - 1990), கங்கை காவியம் (கவிதைத் தொகுப்பு - 1997), ஜல சமாதி (சிறுகதைத்தொகுப்பு - 2008), நிழலைத்தேடி (சிறுகதைத் தொகுப்பு - 2017) என்பன அந்த ஐந்து நூல்களுமாகும். இவர் ஆசிரியராகப் பணியாற்றி அதிபராக ஓய்வுபெற்றவர்.

நாவல் எழுதுவதில் இவரது இந்த முயற்சி வெற்றி நிறைந்த முயற்சி ஆதலால், இன்னும் பல நாவல்களை அவரிடமிருந்து எதிர்பார்க்கலாம் என்று நம்புகிறேன். இந்நாவலின் கதை தொடக்கத்தில் இருந்து முடியும் வரை நம்முடனேயே பயணிக்கின்றது. கதையின் களமும் கதாபாத்திரங்களும் நம்மை அறியாமல் அதற்குள் ஈர்த்துச் செல்கின்றன. நாவலடியை அபிவிருத்தி செய்ய புறப்பட்ட முன்மாதிரியான கிராமசேவகர் யாசீன், நயீமா, ராஜ்குமார், மாலினி ஆகியோர்தான் இந்நாவலை நகர்த்திச் செல்கின்றனர்

மொத்தத்தில் நாவலடியில் ஒன்றுக்குள் ஒன்றாக கொண்டும் கொடுத்தும் நகமும் சதையும்போல் வாழ்ந்த மக்கள் 1983 ஜூலைக் கலவரத்தின் பின்னர் சிதறி சின்னாபின்னமான கதைதான் இந்நாவல். சமகாலத்து வாசகர்கள் எதிர்பார்ப்பது போல் தீவிர அரசியலோ, பொருளாதார மாற்றமோ, போராட்டப் பின்னணியோ, தீவிரவாதப்போக்கோ இந்நாவலில் இல்லாவிடினும், ஒரு காலத்தில் வாழ்ந்து அந்த மண்ணில் வேராகிப்போன மக்களுடைய வாழ்க்கையைக் கூறுவதாக அமைந்துள்ளது.

வட்டார மொழியில் சலிப்பில்லாத நடையில் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. நாவலடி மக்களின் போருக்கு முன்னரான காலத்தையும் அதற்குப் பின்னரான காலத்தின் வாழ்வியல் முறைமையையும் ஆசிரியர் ஏ.எஸ்.உபைத்துல்லா நாவலில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

பெரும்பாலும் கதை உரையாடல் வழியாக ஒரே நேர்கோட்டில் பயணிக்கிறது. விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையில் அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகள், இன ஒற்றுமை, முரண்பாடுகள், இடப்பெயர்வு ஆகியவற்றை உள்ளடக்கி யதார்த்தமாகவும் இயல்பாகவும் கதை காணப்படுகின்றது. கதாசிரியரின் அனுபவமே நாவல் முழுவதும் விரிகின்றது.




சிறுகதையிலும் நாவலிலும் புனைவு மொழி இரண்டு வகைப்படும். ஒன்று பாத்திரங்களில் வாயிலாக அவர்களின் பேச்சு வழக்கில் கூறுவது. மற்றொன்று நூலாசிரியர் கூறும் மொழி நடையாகும். ஏ.எஸ்.உபைத்துல்லா தனது நாவலில் இந்த இருமொழி நடைகளையும் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

கதையில் செயற்கை நிகழ்ச்சிகளோ, திடீர் திருப்பங்களா எதுவுமே இல்லை. தான் எடுத்துக் கொண்ட மையக் கருத்தை சாதுரியமாகவும் அலாதியாகவும் கூறி வாசகர்களின் உணர்வுகளை தொட்டு செல்ல வைத்துள்ளார் ஆசிரியர்.

கதையில் தத்துவங்களைப் போட்டுக் குழப்பாமல் நாவலடி மண்ணையும் அதன் மனோரம்மியமான இயற்கை வளத்தையும் அதில் வாழும் மக்களையும் ஆத்மார்த்தமாக நேசித்து, அந்த மண்ணில் வேராகிப்போன மனிதர்களுடைய வாழ்க்கையில் உள்ள மனிதநேய ஒளிக்கீற்றுகளை ஏ.எஸ்.உபைத்துல்லா தனது நாவலில் பதிவுசெய்துள்ளார்.

மண்வாசனை மிக்க இந்நாவலில் தமிழில் வழக்கிழந்துபோன கணிசம், பம்பல், கசனா, வெள்ளாப்பு, ஈராட்டி, ஒள்ளுப்பம், தெத்தி, சிறுவால் போன்ற சொற்களை நாவலாசிரியர் பயன்படுத்தியிருப்பது சிறப்பானதொரு விடயமாகும். கொடக்கே நிறுவனம் 2021ஆம் ஆண்டு நடத்திய நாவலுக்கான பிரதியாக்கப் போட்டியில் இந்நாவல் சிறந்த நாவலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**கவிச்சுடர் ஏ.எம்.கஸ்புள்ளா**

# இடர்கால இலக்கியங்கள்

## 'பன்முக நோக்கில் உலகமயமாதல்'


'கனகராயன் ஆற்று வடிநிலம்: ஒரு புவியியல் ஆய்வு' என்னும் நூலை மறப்பதற்கில்லை. அது பல புவியியல் ஆய்வாளர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதாக பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். அதன் ஆசிரியர் கலாநிதி சுபாஜினி உதயராசாவினால் தற்போது இன்னுமொரு நூல் எழுதப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. 'பன்முக நோக்கில் உலகமயமாதல்' என்பது அதன் பெயர்.

கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக உலகப் பொருளாதாரம், வர்த்தகம், பிரயாணம், பண்பாடு ஆகிய துறைகளில் உலகமயமாக்கல் செயற்பாடுகள் பல சாதக, பாதக நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளன. இச்செயற்பாடுகளினால் பல நாடுகள் வளர்ச்சி பெற்றபோதும், அவை தவிர்ந்த ஏனைய நாடுகளின் சுதேசப் பொருளாதாரங்கள், பண்பாடுகள் பெரிதும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

இவ்விளைவுகளால் குறிப்பாக பல வளர்முக நாடுகள் மீண்டும் கட்டுப்பாடுகளையும் பாதுகாப்புகளையும் ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருவதைக் காணலாம். இந்நூலில் உலகமயமாக்கல் என்ற செயற்பாடுகளின் நன்மைகள், குறைபாடுகள், பிரச்சினைகள், எதிர்விளைவுகள் போன்றவற்றை குறிப்பிட்ட உதாரணங்களுடன் நூலாசிரியர் ஆரய்ந்துள்ளார் என்ற சாரப்படத் தமது கருத்துகளைப் பேராசிரியர் அந்நூலுக்கான அணிந்துரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கலாநிதி சுபாஜினி உதயராசா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார். அவர் புவியியல் துறையின் முதலாவது பெண் தலைவராகவும் கடமையாற்றியவர். அவர் எழுதிய 'கனகராயன் ஆற்று வடிநிலம் : ஒரு புவியியல்' என்ற நூல் 2009இல் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து அவரது இரண்டாவது ஆய்வு நூலாக இது வெளிவருகிறது.

இவர் பல ஆய்வுகளை மேற்கொண்டு அது தொடர்பில் எழுதிய கட்டுரைகளை உள்ளூர் மற்றும் வெளியூர்களில் நடைபெற்ற மாநாடுகளில் சமர்ப்பித்துப் பாராட்டைப் பெற்றதோடு, புவியியல் தொடர்பான பல வேறு கட்டுரைகளை உள்ளூர் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகிறார்.




உலகிலுள்ள கண்டங்கள் அனைத்தையும் ஐரோப்பியர்கள் வெற்றி கொண்டு அங்கெல்லாம் தமது மொழி, கலை, கலாசாரங்களோடு தமது வாழ்க்கை முறை என்பனவற்றைச் சுதேசிகளிடம் பரப்பிய போது ஐரோப்பிய வாழ்க்கைமுறை உலகமயமானது. இந்நூலானது உலகமயமாக்கத்தின், அதாவது ஐரோப்பிய மயமாக்கத்தின் போக்குகளையும் அவை ஏற்படுத்திய தாக்கங்களையும் பல்வேறு தளங்களில் மொத்தம் ஆறு அத்தியாயங்களில் ஆராய்கின்றது. பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி மாணவர்களின் கற்றலுக்கு வழிகாட்டியாக இந்நூல் வெளிவருவது காலத்தின் தேவையாக அமைவதாக அந்நூலின் பின் அட்டையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உண்மையில் 'உலகமயமாதல்' என்ற சொல் ஆங்கிலத்தில் பரவிய Globalization என்ற கருத்துருவாக்கத்தின் தமிழ்ப்பதம் என்று சொல்லப்படுகிறது. தமிழில் 'உலகமயமாக்கம்' என்ற சொல்லும் சிலவேளைகளில் Globalizationக்கு ஈடாகப் பயன்படுத்தப்படுவதுண்டு. ஆனால், அவற்றிலுள்ள பொருள் வேறுபாடு கவனிக்கத்தக்கது. 'உலகமய மாதல்' தானாக விரியும் ஒரு செயற்பாடு எனவும் 'உலகமய மாக்கம்' என்பது யாரோ அதன் பின்னால் இருந்து செயற்படுத்துவது எனவும் பொருள் தொனிக்கிறது.

கடந்த 1981ஆம் ஆண்டிலேயே உலகமயமாதல் என்பதைப் பொருளாதாரம் தொடர்பில் பயன்படுத்தத் தொடங்கினர் எனத் 'தமிழ் விக்கிப் பீடியா' குறிப்பிடுகிறது. தியோடோர் லெவிட் (Theodore Levitt) என்பவர் எழுதிய 'சந்தைகளின் உலகமயமாதல்' (Globalization of Markets) என்னும் நூலில் உலகமயமாதல் என்பது பொருளாதாரம் தொடர்பில் பயன்படுத்தப்பட்டது. உலகம் தழுவிய சமூகவியல் ஆய்வுகளிலும் இது ஒரு பரந்த, அனைத்தும் தழுவிய தோற்றப்பாடாக (Phenomenon) உணரப்பட்டது என்ற குறிப்பும் அதிலுண்டு.

உலகமயமாதல் என்ற விடயம் பல கோணங்களில்நோக்கப்பட வேண்டிய ஒன்று எனலாம். அதன் சாதகமான விளைவுகளாகப் பின்வரும் விடயங்கள் பார்க்கப்படுகின்றன. வளர்ந்து வரும் நாடுகளுக்கு, அதிகரித்த வாழ்க்கைத் தரத்தின் அதிகரிப்பையும் வளத்தையும் கொண்டுவருவதோடு, முதலாம் உலக நாடுகளினதும், மூன்றாம் உலக நாடுகளினதும் நிதி வளத்தைப் பெருக்க உதவுகிறது என்றும் சொல்லப்படுகிறது. அந்தவகையில் பொருளியல் மற்றும் சமூக அடிப்படையில் உலகமயமாதலை ஒரு விரும்பத்தக்க விடயமாகக் கருத இடமுண்டு.

இன்னொரு நோக்கில், அதாவது பொருளியல், சமூக மற்றும் சூழலியல் அடிப்படையில் எதிர்மறையான, விரும்பத்தகாத ஒரு விடயமாக உலகமயமாதலைக் கருத இடமுண்டு. அதன்படி உலகமய மாதல், வளர்ந்து வருகின்ற சமுதாயங்களின் மனித உரிமைகளை நசுக்குகிறது என்றும் வளத்தைக் கொண்டுவருவதாகக் கூறிக்கொண்டு கொள்ளை இலாபமீட்டுவதை அனுமதிக்கிறது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவை தவிரப் பண்பாட்டுப் பேரரசுவாத (Cultural Imperialism) நடவடிக்கைகளினூடாகப் பண்பாட்டுக் கலப்புக்கு வழிவகுப்பதும் செயற்கைத் தேவைகளை ஏற்றுமதி செய்வதும் பல சிறிய சமுதாயங்கள், சூழல்கள் மற்றும் பண்பாடுகளைச் சிதைத்து விடுவதும் இதன் எதிர்மறை விளைவுகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன என்ற பதிவையும் அதில் கண்டேன்.

எனவே, உலகமயமாக்கல் பற்றிய தேடல்களில் ஈடுபடுபவர்களுக்கும் அது பற்றிய விடயங்களை அறிய ஆர்வம் கொண்டோருக்கும் அது பற்றி கற்கும் மாணவர்களுக்கும் உலகமயமாக்கல் பற்றிய தெளிவான ஆய்வுகளை மேற்கொள்ள விளைவோருக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாக இந்நூல் விளங்குவதோடு, உலகமயமாக்கல் என்ற விடயம் ஏற்படுத்துகின்ற சாதக, பாதக விளைவுகளை அறிந்து சமூகத்தை விழிப்பூட்ட நல்ல ஒரு நூலாகவும் இது விளங்குகிறது.

நூலாசிரியர் கலாநிதி சுபாஜினி உதயராசாவிற்கு எமது பாராட்டுகள்.

**கணபதி சர்வானந்தா**

## 3 ஆவது வருடத்தில் கால்பதிக்கும் அலைகலை வட்டம்










43ஆவது ஆண்டில் கால் பதிக்கும் புதிய அலைகலை வட்டம், எவோட்ஸ் - 2022க்கான விருதளிப்பு மற்றும் கலாமித்ரா விருது வழங்கும் நிகழ்வு ஆகியவற்றை தபால் அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடத்தியது.

மேற்படி நிகழ்வில் புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு விருதுகளை வழங்கிவைத்தார். சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்ட கொழும்பு மாநகர சபை பிரதி மேயர் எம்.ரி.எம். இக்பால், ஜி.குணசேகரன், ஆனந்தகுமார் மற்றும் கலைஞர் பத்மநாதன் ஆகியோர் விருதுகளை வழங்கிவைத்தனர்.



# "நம் சவால் எல்லாம் வாழ்வாதாரமே"

## - எஞ்சலோ ஜோன்ஸ்



**''உலகம் மிகவும் பெரியது. இந்த சினிமா துறையில் நிறைய நபர்களை சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. என் வாழ்நாளில் நான் அறியாத பல விடயங்களை தெரிந்து கொண்டேன்'' என்கிறார் இளம் கலைஞரும் தொழில்நுட்ப வியலாளருமான எஞ்சலோ ஜோன்ஸ். இவர் பல விருதுகளுக்கு சொந்தக்காரர். கொழும்பைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட துறைசார் விடயத்தில் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டு வரும் எஞ்சலோவுடன் இடம்பெற்ற உரையாடலின் தொகுப்பு இது...**




**சினிமா துறையில் உங்களது பயணம் குறித்து பகிர்ந்து கொள்ள முடியுமா ?**

2007ஆம் ஆண்டு கல்லூரி முடித்துவிட்டு இரண்டு வருடம் தொழில் தேடி அலைந்து, இறுதியில் புனித தெரேசாள் பங்கின் பங்கு தந்தையின் உதவியால், Video Image எனும் ப்ரொடக்ஷன் ஹவுஸில் பயிற்சியாளராக 2009ஆம் ஆண்டு சேர்ந்து, 3d அனிமாட்டோர் ஆக ஆரம்பித்தது என் பயணம். என் கல்லூரி நண்பன் கமல்ராஜ் மூலமாக குறுந்திரைப்படத்தில் பணியாற்ற நேர்ந்தது. முதலில் பெரிய விருப்பம் இல்லை என்றாலும், காலப்போக்கில் அது என் காதலி போல் மாறிவிட்டது.

**நீங்கள் தயாரித்துள்ள குறும்படங்கள் பற்றி?**

எனது முதல் குறும்படம் Feb, 2022ஆம் ஆண்டு Ray 03ஆம் திகதி வெளியிட்டேன். இக்குறும்படம் உருவானது ஒரு நம்ப முடியாத விடயம்தான். 2021ஆம் ஆண்டு மிகவும் நெருக்கடியான தோல்விகளை சந்தித்து பின்பு வேறு நாட்டுக்கு சென்று கொஞ்ச காலம் வேறு தொழில் செய்யலாம் என்று நினைத்தபோது என் கல்லூரி நண்பன் சரவணா, என்ன திட்டித் தீர்த்தான். பின்பு அவன் இரவு உணவுக்கு அழைப்பு விடுத்தான். அங்கே எனக்குப் பிடித்தமான செந்தூரன் அண்ணாவும் இருந்தார். என் வாழ்க்கையில் இப்போது இருக்கும் சூழ்நிலையை வைத்து ஒரு கதை சொன்னேன். உடனே இதை படமாக செய்ய எவ்வளவு செலவாகும், எவ்வளவு நாளில் முடிக்கலாம் என்று கேட்க நானும் உடனடியாக எல்லாம் ஆயத்தம் செய்தேன். எனக்கு கதையை எழுதி முடிக்க அமைதியான இடம் எதுவும் இருக்கவில்லை. கையில் பணமும் இல்லை. ஆயிரம் ரூபாவுடன் நான் காலிக்கு செல்லும் சொகுசு பஸ்ஸில் ஏறினேன். அதில் அமர்ந்துதான் என் கதையை எழுதினேன்.

**குறும்படங்கள் தயாரிப்பில் ஈடுபடுவதற்கான ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?**

ஆரம்பத்தில் அப்படியொன்று இருக்கவில்லை, நாளடைவில் சினிமாவின் தாக்கம் மிகப் பெரியது என அறிந்தபோது, நம் கதை சொல்ல இதுவே ஒரு நல்ல ஊடகம் எனத் தோன்றியது. இதே துறையில் பல வருட பரிச்சயம் இருப்பதால் சில முயற்சிகளை குறைந்த செலவில் செய்யலாம் எனத் தோன்றி, பின்னர் அது ஆர்வமாக மாறிவிட்டது.

**கதைக்கான கருவாக எதனை பிரதானமாக கொள்வீர்கள்?**

உண்மையை, நிஜ வாழ்க்கையில் நடந்த அல்லது பாதித்த ஒரு விடயத்தையே கதையின் கருவாகக் கொண்டிருக்கின்றேன். இதுவரை காலமும் அப்படித்தான்.

> ''முதன்முதலில் ஜனாதிபதி விருது வென்ற தமிழ் தொழில்நுட்பவியலாளர் என்பதும் மறுக்கப்பட்டு விட்டது. எப்போதாவது திரைப்படம் செய்ய கிடைக்கும் அரிய வாய்ப்பில் ஒரு பெரிய விருது கிடைத்தும் காணாமல் போன மனவேதனைதான் இன்றுவரை நான் பெற்ற அங்கீகாரம்''

**இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?**

சவால்கள் இல்லாத துறையே இல்லை, நம் சவால் எல்லாமே வாழ்வாதாரம்தான். வாடகை வீடு சொந்தமாக இருந்திருந்தால் நலம் என்று தோன்றும்.

**இத்துறையில் உங்களுக்கு உதவுபவர்கள் யார்?**

கடவுள், அம்மா, அப்பா, அக்கா, மச்சான், என் நண்பர்கள் ஆகியோர்.

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம்)

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...




**கிடைத்த அங்கீகாரங்கள் குறித்து?**

என் நாட்டில் எனக்கு அங்கீகாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. நான் ஜனாதிபதி விருது பெற்றபோது எந்த ஊடகமும் அதனை கருத்தில் கொள்ளவில்லை. பல்வேறு சிங்களத் திரைப்படங்களுடன் போட்டியிட்ட ஒரு தமிழ்த் திரைப்படம் மற்றும் முதன்முதலில் ஜனாதிபதி வென்ற தமிழ் தொழில்நுட்பவியலாளர் என்பதும் மறுக்கப்பட்டு விட்டது. எப்போதாவது திரைப்படம் செய்யக் கிடைக்கும் அரிய வாய்ப்பில் ஒரு பெரிய விருது கிடைத்தும் காணாமல் போன மனவேதனைதான் இன்றுவரை நான் பெற்ற அங்கீகாரம்.

**விருதுகள், கௌரவங்கள் பற்றி?**

2013ஆம் ஆண்டு தேசிய விருது - சிறந்த சிறுவர் காணொளி

2013ஆம் ஆண்டு நடுவர் விருது - ஒளிக்கீற்று - காணொளி பாடல்

2013ஆம் ஆண்டு Derana மியூசிக் வீடியோ - காணொளி பாடல்

2019ஆம் ஆண்டு சிறந்த ஒளித்தொகுப்புக்கான ஜனாதிபதி விருது - கோமாளி கிங்ஸ்

2022ஆம் ஆண்டு - விசேட நடுவர் விருது - குறுந்திரைப்படம் - (Agenda 14)

2022ஆம் ஆண்டு - சிறந்த ஒளித்தொகுப்புக்கான விருது - (Agenda 14) என்பன நான் பெற்ற விருதுகள்.

**இத்துறைசார்ந்த எதிர்கால நோக்கங்கள் என்ன?**

திரைப்படம் தயாரிக்கவேண்டும் என்பதே எனது பெரிய நோக்கமாகும்.



## ‘தமிழ் நதி’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட சிரேஷ்ட பெண் ஊடகவியலாளர்

சிரேஷ்ட ஊடகவியலாளர் அன்னலட்சுமி இராஜதுரையின் எழுத்தாக்கப்பணி, இதழியல் பணி, ஆய்வு - விமர்சனப் பணி, நூலாக்கப்பணி ஆகிய பன்முகப் பணிகளை சிறப்பித்து கொழும்புத் தமிழ்ச் சங்கம் ‘தமிழ் நிதி’ என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது. கடந்த வாரம் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்ற தமிழ்ப் பட்டயக் கற்கைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்விலேயே அவர் இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

யாழ். திருநெல்வேலி மேற்கில் வாழ்ந்த செ.இராசையா - இராசம்மா தம்பதியருக்கு மகளாக 1939 ஜூன் 8ஆம் திகதி பிறந்தவர் அன்னலட்சுமி. புகழ் பூத்த தமிழ்ப் பேறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை கல்வி கற்பித்த பெருமை மிக்க திருநெல்வேலி சைவப் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியையும் தொடர்ந்து கல்வியங்காடு செங்குந்தாந்துக் கல்லூரி, சுன்னாகம், இராமநாதன் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் தனது கல்லூரிப் படிப்பையும் இவர் மேற்கொண்டார்.

பின்னர் ஊடகத்துறைக்குள் பிரவேசித்து தசாப்தங்களை கடந்து பத்திரிகைத்துறைக்குள் இருந்து வருகின்றார். அத்துடன், வானொலியிலும் 1967 - 1968களில் அவ்வப்போது நிகழ்ச்சிகளை செய்து வந்துள்ளார். மகளிர் சம்பந்தமான கருத்தரங்குகள், விழாக்கள், விவாதங்களிலும் கலந்துகொண்டு உரையாற்றி வருபவர். பல விருதுகளையும் கௌரவங்களையும் பெற்ற இவர் அண்மையில் ‘தமிழ் நதி’ விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.



அன்பின் பாதை சமூகத்தின் ‘எண்ணம்போல் வாழ்க்கை’ கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் ஜீவநதி வெளியீடான அஸ்வினி வையந்தியின் ‘யாவும் ஆனந்தமே’ எனும் கவிதை நூல் வெளியீடு ‘எண்ணம்போல் வாழ்க்கை’ கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக.தீபகாந்தன் தலைமையில், திருகோணமலை நகரசபை பொது நூலகக் கேட்போர் கூடத்தில மௌன இறைவணக்கம் மற்றும் மங்கல ஒளியேற்றல் நிகழ்வுகளுடன் ஆரம்பமாகியது.

கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறை தலைவரான பேராசிரியர் செ.யோகராசா முதன்மை விருந்தினராகவும் திருகோணமலை முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் ஓ.குலேந்திரன், கவிஞர் யோகானந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டிருந்தனர்.

தலைமை உரையையும், வரவேற்புரையையும் ‘எண்ணம்போல் வாழ்க்கை’ கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக தீபகாந்தன் நிகழ்த்தினார்.

கவிதாயினி பாலையூற்று அஷ்ரபா நூர்தீன் நூல் அறிமுக உரையையும் கவிஞர் சம்பூர் வதனரூபன் நயவுரையையும் வழங்கினர்.

பேராசிரியர் செ.யோகராசா மற்றும் கவிஞர் யோகானந்தம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.





நூலின் முதற் பிரதியை திருகோணமலை கட்டட தொழில்துறை தொழில்நுட்பக் கல்லூரியின் போதனாசிரியரான பொ.ருசேந்திரன் பெற்றுக்கொண்டார்.

# ‘பாரம்பரியம்’ நிகழ்ச்சியில் முதுபெரும் ஈழத்துப் பாடகர் வீ.முத்தழகு



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் ‘பாரம் பரியம்’ நிகழ்ச்சியில் நம் நாட்டின் புகழ் பெற்ற, தேசிய பாடகர் கலாபூஷணம் வீ.முத்தழகு சூரியகுமார் சிறப்பதிதியாக கலந்துகொண்டு முஸ்லிம் சேவையின் இசைப்பாரம் பரிய நினைவுகளை மிகச் சுவையாக நேயர்களோடு பகிர்ந்து கொள்ளவிருக்கிறார்.

தமிழ் மொழியில் மட்டுமல்லாது, சிங்களம், ஹிந்தி போன்ற மொழிகளிலும் பெருமளவில் பாடல்களைப் பாடி நம் நாட்டின் அனைத்து சமூகத்தவர் மத்தியி லும் தனக்கென தனியான அடையாளத்தை தேடிக் கொண்ட இவர், உலகப் புகழ்பெற்ற சர்வதேச பாடகராகவும் திகழ்கிறார்.

சிறந்த பாடகருக்கான ஜனாதிபதி விருது பெற்ற இவர் சிங்கள மொழியிலும் சிறப்பாகப் பாடி வரு வதுடன், இலங்கையின் தமிழ்த் திரைப்படங்களில் அதிகமான பின்னணி பாடல்களையும் பாடியுள்ளார். இன்றைய இளையோரும் இவரது திரைப்படப் பாடல் களை முணுமுணுக்குமளவுக்கு இவர் பாடிய திரைப் படப் பாடல்கள் பெரும் பிரபலத்தை இவருக்கு தேடிக்கொடுத்தன.

கலாபூஷணம் வீ.முத்தழகு சூரியகுமார், இலங்கை வானொலி முஸ்லிம் சேவையோடு ஆரம்ப காலம் முதல் இன்றுவரை நல்லுறவை பேணிவரும், நம் நாட்டின் தேசிய இசைக்கலைஞர்களில் ஒருவராவார்.

முஸ்லிம் சேவையின் முன்னாள் மற்றும் தற் போதைய சிரேஷ்ட ஒலிபரப்பாளர்கள், கலைஞர் கள், சிறப்பாக இசைத்துறைச் சார்ந்தோர்களின் நேரத் துக்குரிய ஒருவராவார். முஸ்லிம் நிகழ்ச்சிகளில் முத லாவதாக இஸ்லாமிய கீதம் பாடிய வாழைத்தோட்டம் எம்.ஏ.ஹஸன் அலியார் தொட்டு, இஸ்லாமிய பாடல்கள் பாடிய முஸ்லிம், முஸ்லிமல்லாத கலைஞர் கள் பலரோடு, இசைத்துறை சார்ந்தோர் பலரையும் இந்நிகழ்ச்சியினூடாக நினைவூட்டி மகிழ்கிறார்.

முஸ்லிம் சேவையின் ‘பாரம்பரியம்’ நிகழ்ச்சியில் இவர் பரிமாறிக்கொள்ளும் ‘இஸ்லாமிய கீதம்’ பற்றிய பாரம்பரிய தகவல்கள் நம் கலைஞர்களையும் நேயர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இந்நிகழ்ச் சியை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்து வழங்க, முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்து வழங்குகிறார்.

# துரைவி நினைவுப்பேருரையும் விருது வழங்கலும்





துரைவி விஸ்வநாதனின் 92ஆவது பிறந்த நினைவுப்பேருவுரையும் தெளிவத்தை ஜோசப் நினைவேந்தல் - துரைவி விருதுகள் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்கம் வினோதன் மண்டபத்தில் சிவலிங்கம் ஞாபகார்த்தக்குழுவின் தலைவர் எம்.வாமதேவன் தலைமையில் கவிஞர் மேமன் கவியின் வரவேற்புரையுடனும் நிகழ்ச்சித் தொகுப்புடனும் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில், தெளிவத்தை ஜோசப் நினைவேந்தல் உரையை மல்லியப்புசந்தி திலகர் நிகழ்த்துவார். துரைவி நினைவுப்பேருரையை கலாநிதி கலா சந்திரமோகன் (தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர், மொழி கற்கைகள் துறை, மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.) சிங்கள மொழியில் ‘மலையகத் தமிழர்களின் பங்களிப்புகள்’ எனும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.

இப்னு அஸூமத்தின் ‘நீ கூறுகிறாய் இறந்து விட்டாயாம் நீ’ எனும் சிங்கள மொழிக் கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு நூலுக்கான விருதும் ந.மயூரரூபனின் ‘எழுத்தின் இயங்கியல்’ எனும் இலக்கிய ஆய்வு நூலுக்கான விருதும் வழங்கப்படவுள்ளது.

பெண் ஆளுமைக்கான ஜெயம் விருது அன்னலக்ஷ்மி ராஜதுரைக்கு வழங்கப்படவுள்ளது. நிகழ்வின் நிறைவில் நன்றியுரையை ராஜ்பிரசாத் துரைவிஸ்வநாதன் வழங்குவார்.

# இப்னு அஸூமத்தின் நூல் வெளியீட்டு விழா






இப்னு அஸூமத்தின் மொழிபெயர்ப்பு நூலான ‘நீ கூறுகிறாய் இறந்து விட்டாயாம் நீ’ வெளியீட்டு விழா இன்று (19) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் (இந்திய கலாசார நிலையம்) ‘ஞானம்’ ஆசிரியர் சாஹித்ய ரத்னா டொக்டர் தி.ஞானசேகரன் தலைமையில் நடைபெறும்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ள இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் கலந்துகொள்வார். நூலின் முதற்பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்வார். வரவேற்புரையை அம்பிகை டிவகலாலா போமன் நிகழ்த்துவார்.

நூலின் வெளியீட்டுரையை மேமன்கவி நிகழ்த்த, சிறப்புரைகளை குருகொட சிறிவிமல தேரர், கபில எம்.கமகே ஆகியோர் மேற்கொள்வார்கள். நன்றியுரையை இப்னு அஸூமத் நிகழ்த்த, நிகழ்ச்சிகளைக் கலையழகி வரதராணி தொகுத்து வழங்குவார்.

# ‘குறுக்கு வேலி’ கவிதை நூல் வெளியீட்டில்...









மருதமுனை அலிஸ் கலை, இலக்கிய ஆய்வு மற்றும் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் மருதமுனை ஜெஸீமா முஜீப் எழுதிய ‘குறுக்கு வேலி’ கவிதை நூல் வெளியீட்டு விழா மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் இராணுவ உத்தியோகத்தர் மர்ஹூம் ஆதம்பாவா சலீம் நினைவரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தேசியத் தலைவர் ஆசிரியர் ஜெஸ்மி எம்.மூஸா தலைமையில் இந்நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா கலந்துகொண்டு நூலின் முதற்பிரதியை வழங்கி நூல் வெளியீட்டை ஆரம்பித்து வைக்க வர்த்தகர் எம்.ஐ.அப்துல் பரீட் நூலைப் பெற்றுக் கொண்டார்.

கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம்.நவாஸ் வரவேற்புரையை நிகழ்த்தினார். ‘குறுக்கு வேலி’ கவிதை நூல் பற்றி தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப், கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் ஆகியோர் உரையாற்றினர்.

இலக்கிய அதிதிகளாக கவிஞரும் எழுத்தாளருமான எம்.எம்.நௌபல், பாவேந்தல் பாலமுனை பாறூக் ஆகியோர் கலந்துகொண்டனர். ஊடகவியலாளர் ஏ.எல்.எம்.சினாஸ் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். நாஸிக் நபாயிஸ் ஊடக அனுசரணையை வழங்கினார். கவிதாயினி ஜெஸீமா முஜீபுக்கு கவிதாயினி கௌரிதாஸன் மோகனா வாழ்த்துப்பா பாடி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்

# மாற்றுச் சிந்தனைவாதி அ.யேசுராசா

ஆளுமைகளின் அடையாளம் 1



ஈழத்து இலக்கியப் பரப்பில் காத்திரமான மற்றும் கனதியான படைப்புகளால் பெயர் பதித்திருக்கும் மூத்த இலக்கிய ஆளுமை, அணி சேர்ந்து முற்போக்கு, நற்போக்கு, மெய்யுள் என்று இலக்கிய உலகில் பயணிக்க விரும்பாத மறுத்தோடி, ''கலை உண்மையைப் பேசவேண்டும். கலைஞனும் உண்மையின் பக்கத்திலேயே நிற்க வேண்டும்'' என்ற கருத்தோடு இலக்கிய உலகில் இயங்கும் படைப்பாளி, அனுபவ வெளிப்பாடாக, அழகியல் நிறைந்ததாக கலை, இலக்கியம் அமைய வேண்டும், அறம் சார்ந்த நிலைப்பாடு பேணப்பட வேண்டும் என்ற உறுதியோடு செயற்படும் இலக்கியவாதி - அ.யேசுராசா.

1968இல் இலக்கிய உலகப் பிரவேசம் பெற்றவர். சிறுகதையாசிரியர், விமர்சகர், கவிஞர், சிற்றிதழாசிரியர், பத்தி எழுத்தாளர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மொழிமாற்றுக் கவிதைக்காரர் என்று பன்முக அடையாளம் பெற்றிருப்பவர் அவர்.

யேசுராசா தனது அறுபது வருட கால இலக்கிய வாழ்வில், தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும் (சிறுகதை, மார்கழி - 1974 மற்றும் மார்கழி - 1989), அறியப்படாதவர்கள் நினைவாக (கவிதை -1984), தூவானம் (பத்தி - 2001), பனிமழை (மொழிபெயர்ப்புக் கவிதைகள் - 2002), பதிவுகள் (பத்தி - 2003), குறிப்பேட்டிலிருந்து (நவீன இலக்கியக் கட்டுரைகள்- 2007), திரையும் அரங்கும்: கலைவெளியில் ஒரு பயணம் (திரைப்படம், நாடகம் பற்றிய கட்டுரைகள் - 2013) நினைவுக் குறிப்புகள் (கலை, இலக்கியக் கட்டுரைகள் - 2016) நிழல்கள் (பல்மொழித் திரைப்படக் கட்டுரைகள் - 2018) அங்குமிங்குமாய் (பல்துறைக் கட்டுரைகள் - 2021) ஆகிய நூல்களை இலக்கிய உலகுக்குத் தந்திருப்பவர்.

அவருடைய படைப்புகள் அவருடைய இலக்கியச் செல்நெறியை எடுத்துக் காட்டுவனவாகவும் வாசகர்களை வசீகரிப்பனவாகவும் புகழ் பெற்றிருப்பவை. இவை தவிர சிற்றிதழ்கள், தொகுப்புகள் மூலமாகவும் அதிகம் பேசப்படுபவர் அ.யேசுராசா.




அலை, கவிதை, தெரிதல் போன்ற சிற்றிதழ்களை அவர் வெளியிட்டார். 35 இதழ்களை விரித்த 'அலை' (1975 - 1990) ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பைச் செய்ததை ஆய்வாளர்கள் எடுத்துரைப்பர்.

பிறநாட்டு நவீன படைப்புகளை இங்கு அறிமுகம் செய்யும் இதழாகவும் கலைத்துவம், அழகியல் என்பவற்றில் கரிசனை செலுத்தும் இதழாகவும் அதுவரை ஈழத்திலிருந்து வந்த இலக்கியப் போக்கிலிருந்து மாறுபட்ட போக்கைப் பிரதிபலிக்கும் இதழாகவும் 'அலை' அமைந்ததை இலக்கிய உலகம் பேசும். 1975 - 1985 வரை அதன் நிர்வாக ஆசிரியராகவும் 1985 - 1990 வரை அதன் ஆசிரியராகவும்




அ.யேசுராசா செயற்பட்டார் .

'கவிதை' இளங்கவிஞர்களை வளப்படுத்தும் நோக்கில் 1994இல் இரு திங்கள் இதழாக மலர்ந்தது. இளங்கவிஞர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகளையும் நடத்திய 'கவிதை' 9 இதழ்களை விரித்தது. இவ்விதழில் கவிதை எழுதிய பலர் இன்று ஈழத்தின் முக்கிய கவிஞர்களாகப் பரிணமித்துள்ளதைப் படைப்புலகம் குறிப்பிடும்.

'தெரிதல்' இளையவர்களுக்கு இலக்கியம் சார்ந்த தகவல்களைத் தெரிவிக்கும் வகையில் அ.யேசுராசா வெளியிட்ட இதழாகும். 2003இல் அதன் முதல் இதழ் வெளிவந்தது.

ஈழத்தில் வெளிவந்து, அதிர்வலைகளை ஏற்படுத்திய சிறந்த தொகுப்பு நூல்களான பதினொரு ஈழத்துக் கவிஞர் (கவிதை - 1984) மரணத்துள் வாழ்வோம் (கவிதை - 1985), தேடலும் படைப்புலகமும் (ஓவியம், சிற்பம் - 1987) என்பவற்றின் தொகுப்பாசிரியர்களில் ஒருவராகவும் காலம் எழுதிய வரிகள் (கவிதை - 1994) நூலின் தொகுப்பாசிரியராகவும் திசை (1989 - 1990) வாரவெளியீட்டின் துணை ஆசிரியராகவும் இலக்கியத்தில் பல்வேறு தளங்களில் வேகமாகச் செயற்பட்டவர் அ.யேசுராசா.


நேர்காணல்கள், கட்டுரைகள் மூலமும் இலக்கியப் பரப்பில் அறியப்பட்டிருந்தவர் அவர். அவரின் இலக்கியப்போக்கு, கருத்தியல் குறித்து விமர்சனங்கள் வைக்கப்பட்ட போதிலும், அவருடைய ஆற்றல், இலக்கியத்தேடல் என்பவற்றின் மூலம் மதிப்புப் பெற்றிருந்தவர் அவர்.

அவருடைய மற்றுமொரு கலைப் பணியாகச் சொல்லப்படுவது திரைப்படம் சார்ந்த அவரின் பங்களிப்பாகும்.

ஏ.ஜே.கனகரெட்னாவை தலைவராகக் கொண்ட 'யாழ். திரைப்பட வட்டம்' என்ற அமைப்பின் மூலம், நல்ல பிறமொழிப் படங்களை யாழ்ப்பாணத்தில் திரையிடுவதில் ஆர்வத்துடன் இயங்கிவர் அ.யேசுராசா.

1998 – 2006 வரையான ஆண்டுகளில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், பேராசிரியர் இரா.சிவச்சந்திரனுடன் இணைந்து, ஒவ்வொரு கிழமையும் பிறமொழிப் படங்களையும் குறிப்பிடத்தகுந்த தமிழ்ப் படங்களையும் காணொளி வாயிலாகக் காட்டுவதற்கு முன்னின்றவர். கலந்துரையாடல்கள் நடத்தியவர். நல்ல திரைப்படங்கள் பற்றி அவ்வப்போது சிற்றிதழ்களில் எழுதியவர் என்று அவரின் கலைப்பணி விசாலிக்கும்.

கலை, இலக்கியப் பணிக்காக பல விருதுகளைப் பெற்றிருப்பவர் அவர். சிறந்த சிறுகதை நூலுக்கான (தொலைவும் இருப்பும்) இலங்கை சாஹித்திய மண்டல விருது - 1974, பல்துறை இலக்கியத்திற்கான (தூவானம்) வடக்கு - கிழக்கு மாகாண சபையின் சாஹித்ய விருது - 2001, சிறந்த மொழிபெயர்ப்பு கவிதை நூலுக்கான (பனிமழை) வடக்கு - கிழக்கு மாகாண சபையின் சாஹித்ய விருது - 2002, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உலகத் திரைப்பட விழாவில் கிடைத்த வாழ்நாள் சாதனையாளர் விருது - 2015, கனடாத் தமிழ்த்திரைப்பட மேம்பாட்டு அமையம் வழங்கிய கலைக்குரிசில் கே.எஸ்.பாலசந்திரன் விருது - 2015, குருநகர் சமூகசேவை மன்றம் கனடா - அமெரிக்கா, வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது - 2016 என்பன அவர் பெற்ற விருதுகளில் முக்கியமானவை.




யாழ்ப்பாணம் குருநகரில் அத்தனாஸ் - அ.செபஸ்தியானா (நல்லம்மா) தம்பதியின் மகனாக 1946இல் பிறந்தவர் அ.யேசுராசா. ஆரம்பம் முதல் க.பொ.த. சா/த வரை குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையிலும் க.பொ.த. உயர்தரத்தை, யாழ்ப்பாணம் ஸ்டான்லி கல்லூரியிலும் கற்றவர். அஞ்சல் அதிபர் தந்தியாளராக (1967-1987) பதவி வகித்து ஓய்வுபெற்றவர். காலஞ்சென்ற மேசி ஜெயறோசா (சிறப்புப் பயிற்சி பெற்ற விஞ்ஞான ஆசிரியர்) இவரின் மனைவி.

இலக்கிய உலகில் தனித்துவமான செயற்பாடுகளின் மூலம் தடம் பதித்திருக்கும் அ.யேசுராசா இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து திறனாய்வு, விமர்சனம் படைப்பிலக்கியம் என்பவற்றில் தொடர்ந்து பயணிக்க வேண்டும். அதனூடாக இளைய தலைமுறைப் படைப்பாளர்களும் உத்வேகம் பெறவேண்டுமென்பதே நமது அவாவாகும்.

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

# ஈழத்தில் சிறுவர் இலக்கியமும் குழந்தைக் கவிஞர் அம்பியும்



**ஈழத்து சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் கவிஞர் அம்பியின் காத்திரமான படைப்புகள் வரலாற்றில் நிலைத்திருக்கும். அவரது 94ஆவது பிறந்த நாளையொட்டி (பெப்ரவரி 17, 1929) இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

அம்மாவின் தாலாட்டுப் பாடலில், இனிய தேனாக சுவை ததும்பும் வரிகளுடாகவே தொடங்குகிறது சிறுவர் இலக்கியத்தின் வரலாறு. குழந்தைப் பாடல்களின் இலக்கிய இசையின் ஆரம்பப்புள்ளி அம்மாவின் 'ஆராரோ' பாடல்கள்தான். அதன் வழியே குழந்தை கொஞ்சம் வளர்ந்து அதேபோன்ற பாடல்களைக் கேட்க ஆவலாக இருக்கும். இதனூடாகவே சிறுவர் இலக்கியம் வளர்ச்சியடைந்ததைக் காணலாம்.

### யாழ். பரியோவான் மாணவன் கவிஞர் அம்பி

இத்தகைய சிறுவர் இலக்கியப் படைப்புகளை தாயகத்தில் மாத்திரமின்றி, புலம்பெயர் மண்ணிலும் படைத்த ஈழத்தைச் சேர்ந்த அம்பி என அழைக்கப்படும் இராமலிங்கம் அம்பிகைபாகர் சிறுவர் இலக்கிய வரலாற்றில் காத்திரமான பங்களிப்பை ஆற்றியுள்ளார்.

'குழந்தைக் கவிஞன்' என்றும் 'ஈழத்தின் தேசிகவிநாயகம் பிள்ளை' என்றும் போற்றப்படும் கவிஞர் அம்பியின் எளிமையும் தமிழின் அழகும் ஒருங்கே கூடியமைந்த பாடல்கள், பல குழந்தைகளின் நாவில் இன்றும் தவழ்கின்றன. தமிழ் மொழி வளர்ப்பு, கவிதை என்று பல தளங்களில் சாதனைகள் செய்த கவிஞர் அம்பி, பெப்ரவரி 17ஆம் திகதி தனது 94ஆவது அகவையினுள் தடம்பதித்து விட்டார்.




இராமலிங்கம் அம்பிகைபாகர் என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர் அம்பிக்கு வடக்கே நாவற்குழி சொந்த ஊராகும். தனது ஆரம்பக்கல்வியை நாவற்குழி சி.எம்.எஸ். பாடசாலையிலும் பின்னர் உயர்கல்வியை யாழ். பரி.யோவான் கல்லூரியிலும் தொடர்ந்த அவர், அறிவியல் மற்றும் கணித ஆசிரியராக இலங்கையில் பல பாகங்களிலும் பணியாற்றியுள்ளார். ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவரான கவிஞர் அம்பி, அவுஸ்திரேலியாவில் தன் முதுமையிலும் தமிழுக்கு ஆற்றிய பணியை எவரும் மறவார்.

கவிஞர் அம்பி அவுஸ்திரேலிய தமிழ் சமூகத்திற்கு செய்த பங்களிப்பு மிகப் பெரிது.

### ஈழத்து சிறுவர் இலக்கியம்

ஈழத்தின் சிறுவர் இலக்கிய வளர்ச்சி என்பது பெரும்பாலும் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஆய்வாகவே அமைந்து வந்துள்ளது. ஆயினும், தற்போது வடக்கிலும் - கிழக்கிலுமாக பல சிறுவர் இலக்கியப் படைப்பாளிகளை காணக்கூடியதாக உள்ளது. தமிழில் வெளிவந்த முதலாவது சிறுவர் பாடல் நூலாக இருப்பது யாழ்ப்பாணப் புலவர் தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் 1886ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட 'பாலியக் கும்மி' என்பதே ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.

இதனைப்போல் ஈழத்து சிறுவர் பாடல் மரபுக்கு வளமும் வனப்பும் சேர்த்த நவாலியூர் சோமசுந்தரப் புலவரை தலைசிறந்த குழந்தைக் கவிஞராக போற்றும் மரபு நம்மிடையே எப்போதும் உண்டு. அவரது பாடல்களில் ஒன்றான 'ஆடிப்பிறப்பு' எனும் பாடலை சிறுவயதில் பாடிப்பாடிப் பரவசமடைந்திருக்கின்றேம்.

இன்றைய காலத்திலும் பல்வேறு நிகழ்வுகளில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் தேனினும் இனிய பாடல்களை குழந்தைகள் பாடுவதைக் காணலாம். ஈழத்து சிறுவர் இலக்கிய வரலாற்றில் தலைசிறந்தவராகவும் முதன்மையானவராகவும் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் விளங்குகிறார். மேலும், வித்துவான் வேந்தனார் சிறந்த கவிஞராகவும் இன்னோர் ஈழத்து சிறுவர் இலக்கிய சிருஷ்டியாகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கவிஞர் அம்பியும் சிறுவர் இலக்கியமும்

'குழந்தைக் கவிஞன்' என்றும் 'ஈழத்தின் தேசிகவிநாயகம் பிள்ளை' என்றும் போற்றப்படும் கவிஞர் அம்பி 1950ஆம் ஆண்டு முதல் எழுதி வருபவர். கவிதை, கவிதை நாடகம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு முதலான துறைகளில் அறியப்பட்டவர். அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் தற்போது வசிக்கும் கவிஞர் அம்பி, சிறுவர் இலக்கியத்திற்கு, குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் தமிழ்ச் சிறார்களுக்காக கவிதைகள் பலவற்றையும் படைத்துள்ளார்.

'இலட்சியக் கோடி' என்ற சிறுகதையின் மூலம் தமிழ் எழுத்துலகில் அறிமுகமானவர். இச்சிறுகதை 'தினகரன்' இதழில் வெளிவந்தது. அத்துடன் தமிழ்நாட்டில் அண்ணாதுரை முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற பெருமைக்குரியவர். சிறுவர் இலக்கியத்திற்கு பெரும் பங்காற்றிய கவிஞர் அம்பி, ஈழத்தின் தேசிகவிநாயகம் பிள்ளையாக 'சுபமங்களா' இதழால் வர்ணிக்கப்பட்டவர்.

### குழந்தைக் கவியின் படைப்புகள்

கவிஞர் அம்பியின் 'வேதாளம் சொன்ன கதை' கவிதை நாடகம், இலங்கையில் தாசீசியஸின் நெறியாள்கையிலும் 'யாழ் பாடி' என்ற கவிதை நாடகம் அவுஸ்திரேலியாவில் அண்ணாவியார் இளைய பத்மநாதனின் அண்ணாவியத்திலும் அரங்கேறியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் அண்ணா பதக்கத்திற்காக கவிதைப்போட்டி நடைபெற்று எம்.ஜி.ஆர். தங்கப்பதக்கம் அளித்த பத்து கவிஞர்களில் கவிஞர் அம்பியும் ஒருவர். கவிஞர் அம்பி 10 கவிதை நூல்கள் கிறீனின் அடிச்சுவடு, அம்பி பாடல் (சிறுவர் பாடல்கள்), வேதாளம் சொன்ன கதை (மேடை நாடகம்), கொஞ்சும் தமிழ் (சிறுவர் பாடல்கள்), அந்தச் சிரிப்பு, யாதும் ஊரே, ஒரு யாத்திரை, அம்பி கவிதைகள், மருத்துவத் தமிழ் முன்னோடி, பாலர் பைந்தமிழ், உலகளாவிய தமிழர், Ambi's Lingering Memories (Poetry), A String of Pearls ஆகியன அவரின் படைப்புகளாகும்.

சிறுவர் இலக்கியம், தமிழ் மொழி வளர்ப்பு, கவிதை என்று பல தளங்களில் சாதனைகள் செய்த கவிஞர் அம்பி 1968இல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு தங்கப் பதக்க விருதையும் பெற்றுள்ளார். அதன்பின் 1993இல் இலங்கை - இந்து கலாசார அமைச்சின் 'தமிழ்மணி' விருதும் 1994இல் 'கொஞ்சும் தமிழ் சிறுவர்' இலக்கிய நூலுக்கு 'இலங்கை சாஹித்ய' விருதும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### புலம்பெயர் மண்ணில் தமிழ் இலக்கிய வளர்ச்சிப்பணி

புலம்பெயர் மண்ணில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக 1997இல் அவுஸ்திரேலியாவின் மெல்பர்னில் 'நம்மவர்' விருதையும் 1998இல் கனடாவில் சி.வை.தாமோதரம்பிள்ளை தங்கப்பதக்க விருதையும் பெற்றுள்ளார். அதன் பின்னர் 2004இல் அவுஸ்திரேலியாவின் கன்பராவில் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் விருதையும் பெற்றுள்ளார். கவிஞர் அம்பியின் கவிதைகள் நூல்களிலும் பல இதழ்களிலும் இணையத்தளங்களிலும் வெளியாகி பிரசித்தி பெற்றுள்ளன. அக்கவிதைகளுள் தமிழ் உணர்வை ஊட்டும் வரிகளை நாம் காணலாம்.

***"ஓடிடும் தமிழா நில், நீ ஒரு கணம் மனதைத்தட்டு***
***வீடு நின்னூருள் சொந்தம், விளைநிலம் நாடு விட்டாய்***
***தேடியதெல்லாம் விட்டுத்திசை பல செல்லும் வேளை***
***பாடிய தமிழை மட்டும் பாதையில் விட்டிடாதே"***

என்று புலம்பெயர் மண்ணிலும் பல தளங்களில் சாதனைகள் செய்த கவிஞர் அம்பியின் படைப்பியல் வரலாறு காலங்காலமாக நிலைத்திருக்கும். கவிஞர் அம்பி 94ஆவது (பெப்ரவரி 17, 1929) அகவையில் தடம் பதித்தாலும், தமிழுக்கு ஆற்றும் பணியில் இளமையாகவே என்றும் மிளிர்கிறார்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7